# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM දේසියම්



சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 50 | 09.05.2023 (செவ்வாய்க்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 9 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# தமிழர் தாயகத்தில் மற்றுமொரு புத்தர் சிலை...!



## தமிழ் மக்கள் விடுக்கும் கோரிக்கை...!

**தமிழர்களின் தாயகம் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்தலமான புல்மோட்டை அரிசிமலை கடற்கரை பகுதியில் புதிதாக புத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையை நெருங்கியுள்ளதை ஒளிபடங்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது.**

பக்கம் 5

# தமிழர்களை தாயகத்திலிருந்தும் வெளியேற்றவா புத்த கோயில்கள்?..! சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி..!



வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பக்கம் 5

# பதவி விலகுமாறு ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டதா..?

## வடக்கு ஆளுநர் வெளியிட்ட தகவல்

பதவியில் இருந்து விலகுமாறு ஆளுநர்கள் சிலருக்கு ஜனாதிபதி செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டதாக கூறப்படும் விடயம் தொடர்பான முக்கிய தகவலை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வெளியிட்டுள்ளார்.

வடக்கு உள்ளிட்ட சில மாகாணங்களின் ஆளநர்களை பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி



பக்கம் 5



பக்கம் 5

# வடக்கில் விகாரைகள் சட்டவிரோதம் என்றால் தெற்கில் இந்து ஆலயங்கள் சட்டவிரோதம்!

தனது கருத்துக்களின் மூலம் தொடர்ச்சியாக தமிழ் மக்களிற்கு எதிரான வன்மத்தை கக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ஒருவர் சரத் வீரசேகர. தமிழ் மக்களுக்கு எதிராக அரங்கேறிய இன, மத ரீதியாக பிரச்சனைகளில் சரத் வீரசேகர வெளியிட்ட பல கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்தளவிற்கு தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்க எண்ணுகின்ற முற்போக்கான




# தமிழ் இனவழிப்பின் நினைவுநாள்

## வடக்கு, கிழக்கு முழுவதும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்!

தமிழ் இனப்படுகொலையின் நினைவு நாளான மே 18 ஆம் திகதி அண்மித்துக் கொண்டிருக்கும் நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தமிழர் தாயகம் முழுவதும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து இன்று முதல் வருகின்ற மே 15ம் திகதிவரை வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. இதன் முதல் நிகழ்வே இன்று (09) செவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறையில்

பக்கம் 5

# சித்திரவதை செய்யப்படும் தமிழ் அரசியல் கைதிகள்!

## சட்டத்தரணி தவராசா பகீர் தகவல்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் தமிழ் அரசியல் கைதிகள், கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டே, காவல் துறையினரால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக, சட்டத்தரணி கே.வி தவராசா தெரிவித்தார். யாழ்.பொது நூலகத்தில் அண்மையில் இடம் பெற்ற உழைக்கும் மகளிர் அமைப்பின் மகளிர் தின நிகழ்வில்,

பக்கம் 3

# விசாரணை என்ற பெயரில் முட்டுக்கட்டை போடலாம் என நினைக்கின்றது அரசு


## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் : க.துளசி

விசாரணைகள் என்ற பெயரில் போராளிகளை அச்சம் கொள்ளச் செய்யலாம், அவர்களின் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளை முடக்கி விடலாம் என்று அரசு நினைக்குமாயின் அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே தரும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார். ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிருக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு

பக்கம் 8

# ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில்

## நாம் பங்குபெற்றுவோம்! – இரா.சம்பந்தன் அதிரடி அறிவிப்பு



பக்கம் 3

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது.

**தமிழ் இனத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் நம்மவர் எவரையும் உறுத்துகின்ற முதல் விடயம் நாம் பிளவுபட்டு நிற்பதுதான்!**

யுத்தம் முடிவடைந்த 2009ம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான கடந்த 14 வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளால் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டு நிற்க முடியவில்லை.

2010ம் ஆண்டு பாராளுமன்ற பொது தேர்தலில் ஏற்பட்ட பிளவுகளும் பிரிவுகளும், இடைக்கிடையே இணைவுகள், மீண்டும் உறவுகள் என்ற ரீதியில் சில இடைவெளிகளோடு, இன்று வரையில் ஒற்றுமையீனம் என்ற ஒரு பாரிய அரசியல் பிரச்சனையாக, தமிழ் மக்கள் மத்தியில் தொடர் கதையாய் நின்று கொண்டிருக்கின்றது.

இப்பொழுது தமிழ் மாநிலத்தில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது அரசியல் கட்சிகள் 4 அணிகளாக பிரிந்து நிற்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் என 5 கட்சிகள் ஓரணி!

கடந்த ஆண்டு வரையில் கூட்டமைப்பில் பெரிய கட்சி எனக் கருதப்பட்ட தமிழரசுக் கட்சி இப்பொழுது தனி!

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழக்கம் போலவே தனி அணி!

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் 4 கட்சிகள் கொண்ட கூட்டணி ஒன்றுக்கு கடந்த தேர்தலில் தலைமை தாங்கி, அதன் தனி ஒரு உறுப்பினராக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த விக்னேஸ்வரன், இப்பொழுது கஜேந்திரகுமார் அணியில் இருந்து பிரிந்து வந்த மணிவண்ணன் குழுவினரையும் இணைத்துக் கொண்டு தன் சொந்த கட்சியின் பெயரில் தமிழ் மக்கள் கூட்டணி!

விக்னேஸ்வரன் தலைமை தாங்கி வந்த 4 கட்சி கூட்டணியில் தானும் ஒரு கட்சியாக பயணித்த அனந்தி சசிதரன், வேறுவழி இல்லாத நிலையில் ஒரு நேசக்கட்சியாக அவரின் கட்சியுடன் ஒரே அணி!

ஆனால் இவர்கள் எல்லோருமே, விக்னேஸ்வரனை தவிர, போர் முடிவடையும் வரை ஒன்றாக பயணித்தவர்கள் தான். புளொட் மட்டும் விதிவிலக்காக இருந்தது. தமிழ்த் தேசிய கூட்டகஊமைப்புக்குள் இணைந்து கொள்ள அது விரும்பிய போதிலும் ஏனோ அதற்கு அங்கு இடம் கிடைக்கவில்லை.

யுத்தம் முடிந்தும் ஓர் 2 ஆண்டு காலம் காத்திருந்த பின்னரே, அது இணைத்துக் கொள்ளப்பட்டது. தமிழரசுக்கட்சியின் மேலாதிக்க மனோபாவமும், நடத்தையும் தான் கூட்டமைப்பு கடந்த ஆண்டு இறுதியோடு கலைந்து போய், உடனடியாகவே 5 கட்சிகளோடு மீண்டும் கூட்டமைப்பாக மறுபிறப்பு எடுக்க காரணமானது.

தமிழ்க் கட்சிகளின் இன்றைய நிலைமைகளை மேலும் விபரிக்காமல், ஆக்கபூர்வமாக தொடர்ந்து கூறுவதானால், இந்த நிலைமைக்கு எது காரணம்? யார் காரணம்?

இந்த வேளையில் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக வருவதற்கு அதன் மூன்று முக்கியஸ்தர்கள் மும்முரமாக முயன்று கொண்டு இருப்பதாக வரும் உண்மையான செய்திகள் ஊர்ஜிதம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறீதரன், சுமந்திரன், சிவஞானம்! இந்த மூன்று S களின் மோதலில், ஏற்கனவே கோஷ்டிகள், குழுக்கள் என ஈடாடிப் போயிருக்கும் தமிழரசுக்கட்சி தடுமாறி, தள்ளாடி, தடுக்கி விழப்போகின்றதா! அல்லது இவர்களில் ஒருவர் தலைவராகி ஓர் இறுக்கமான தலைமைத்துவத்தை புதிய தலைவர் S தமிழரசுக் கட்சிக்கு வழங்குவாரா! என்கின்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களையும் தாண்டி கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் அடிபடலாம் என்றாலும் கூட, இதைப்பற்றி எல்லாம் சாதாரண தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளப்போவது கிடையாது,

ஏனெனில், எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்னும் சலிப்புடன் கூடிய முணுமுணுப்பு, எங்கள் மக்கள் அரசியல் பேசும் மரணவீடுகள், திருமணவீடுகள் மற்றும் இன்னோரன்ன நிகழ்வுகள் எல்லாவற்றிலும் தவறாமல் நிகழும் சங்கதி என்பது நன்கறியப்பட்ட விடயம். எமது தமிழ் மக்கள் தமது அரசியல் வாதிகளை நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் மேடைகளில் பேசப்படும் ஒற்றுமை என்னும் விவகாரம் வெறும் புலுடா என்பது, அரசியலை நன்கறிந்த அனைத்து தமிழ் மககளுக்கும் அத்துபடி!

இந்த புலுடா அரசியல் காரணமாகத்தான், வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும், கிழக்கில் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனும் வியாழேந்திரனும், எம் பிக்களாக மட்டுமின்றி அதிகாரத்துடன் கூடிய அந்தஸ்து கொண்ட பெரும் புள்ளிகளாகவும் வலம் வர முடிந்தது- முடிகின்றது.

அவர்களை விட்டுவிடலாம்! அவர்களின் அரசியல் சிங்கள தேசத்தின் செல்லப்பிள்ளைகளாக சீவிப்பதில் தான் செழித்து நிற்கின்றது என்பது நாடறிந்த உண்மை.

அது, ஒரு மாதிரியான மக்கள் சேவை!. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பிரிந்து மோதிக்கொண்டிருக்கும் வரையில் இத்தகைய மக்கள் சேவைக்கு புதிது புதிதாக ஆட்கள் வந்து கொண்டுதான் இருப்பார்கள்.

இப்பொழுது உள்ள கேள்வி ஒன்றே ஒன்று தான்!

விடுதலைக்காக கண்ணீரும், செந்நீரும் சிந்திய சாதாரண தமிழ் மக்கள், “கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா! கருகத் திருவுளமோ? என்று கையெடுத்து கும்பிட்டு கேட்காமல் விட்டாலும் கூட, தமக்குள்ளே இடைக்கிடையே மௌனமாக வேதனைப்படும் கையறு நிலையில் தான் தமிழ்த் தேசிய எழுச்சி இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்றது.

வெற்றிகரமாக முடிந்துபோன ஹர்த்தாலுக்குப் பிறகும் இதுதான் நிலைமை! ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இதற்கு பல காரணங்கள் உண்டு ஆனால் முதல் காரணம்-பிரதான காரணம் ஒற்றுமைப்பட தவறி நிற்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் என்று தான் கூற வேண்டும். சகல முனைகளிலும் துன்பங்களையும், தொல்லைகளையும் தினசரி சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசத்தின் மக்களின் மன உணர்வுகளை இந்த தமிழ் தேசியம் பேசும் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், தளபதிகளும் எப்பொழுதுதான் உணரப் போகின்றார்கள்?

யாரோ ஒருவர் எங்கோ சொன்னது இப்பொழுது நினைவிற்கு வருகின்றது. எமது எதிரிகள் எமது இனத்துக்குள்ளே எம்மோடு தான் இருக்கின்றார்கள்! தமிழ்த் தேசத்தின் நெருக்கடியான இன்றைய நிலைமையில் இவர்களை எல்லாம் ஒற்றுமைப்பட வைப்பதற்கு என்னதான் வழி?

இதைத்தான் தமிழ் தேசத்தின் விடுதலையை தீவிரமாக நேசிக்கும் ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் இப்பொழுது உடனடியாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனம் திருந்தி இவர்கள் ஒற்றுமைப்படவில்லை என்றால், மனம் வருந்தி இவர்கள் ஒற்றுமைப்படும் காலம் கட்டாயமாக வரும்.
ஏன் எனில் வரலாறு மீண்டும் நிகழ்கின்றது என்பது ஓர் நிரந்தரமான உண்மை.

**நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது.**

ஆசிரியர்

# 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழ் கட்சிகள்

## ஒற்றுமைப்பட வேண்டும்! எஸ். எஸ்.குகநாதன்.



தமிழ் அரசியல்வாதிகள் தங்களது பதவிகளை தக்க வைக்க பயன்படுத்தும் ராஜதந்திர நகர்வுகளை தமிழரின் தீர்வு விடயத்திலும் பயன்படுத்த வேண்டும் என டான் குழுமத் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான எஸ்.எஸ். குகநாதன் தெரிவித்தார்,

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கட்சியின் மறைந்த தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் அவர்களின் 37 வது ஆண்டு நிறைவு தின நிகழ்வில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் 5 கட்சிகள் ஒன்றிணைந்து குத்துவிளக்கு சின்னத்தில் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். தமிழரசு கட்சியினர் நினைத்தார்கள் ரெலோ, புளொட் கட்சிகள் என்ன செய்தாலும் தமிழரசு கட்சியை விட்டுவெளியே போக மாட்டார் கள் என்று ஆனால் திடீரென்று தமிழரசு கட்சியினை விட்டு வெளியே வந்து குத்துவிளக்கு சின்னத்தில் ஒன்றிணைந்து விட்டார்கள்.

குத்துவிளக்கு சின்னத்தை ஆரம்பிக்கும் போது பயன்படுத்திய அரசியல் ராஜதந்திரத்தை தமிழரின் உரிமையினை பெறுவதற்கும் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக அரசியல் பதவிகளை தக்க வைப்பதற்காக பயன்படுத்தும் ராஜதந்திரங்களை, தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்கும் பயன்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை விடுகின்றேன். மாகாண சபையினை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என அனைவரும் சிந்திக்க வேண்டும். பௌத்த மயமாக்கள் என்பது ஒரு பிரச்சனைக்குரிய விடயமாக மரியுள்ளது.

அதனை தடுத்து நிறுத்துவதற்கான வழிகள் எங்களிடம் இருக்கும்போது அதை தவிர்த்து பௌத்த மயமாக்கல் நடக்குது என கத்திக் கொண்டிருக்கின்றோம். இதனால் எவ்விதமான பயனும் இல்லை. நடக்கக்கூடிய விடயங்களை மாத்திரமே நாங்கள் சிந்திக்க வேண்டும். ஜனாதிபதி அவர்கள் 13 வது திருத்தசட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறுகின்றார் எனவே, ஜனாதிபதி ரணில் அவர்களின் ஆட்சியின்போது இந்த 13-வது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒற்றுமைப் பட வேண்டும்.

புதிய அரசியல் யாப்பு என்பது இப்பொழுது சாத்தியமற்ற விடயம். ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமைப் பட வேண்டும். மாகாண சபை என்பது தான் எமது தீர்வுக்குரிய ஒரு துரும்பு, பௌத்த மய மாக்கல் மற்றும் தமிழரின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மாகாண சபை உறுதுணையாக இருக்குமாக இருந்தால் அதனைப் பாதுகாப்பதற்கு கட்சிகள் இணைந்து ஒற்றுமையாக முயற்சிக்க வேண்டும். - என்றார் ,

# வடக்கின் விகாரைகளும் தெற்கின் இந்துக் கோவில்களும் ஒன்றல்ல..!

## தமிழ்த் தேசியக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர், ஜெ.ஜனார்த்தனன்

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு எங்கும் பௌத்த மத அடையாளங்களைத் திணிப்பதும் அதன் தொடர்ச்சியாக அப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதுமாக சிங்களப் பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல் வேகமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஜெ.ஜனார்தனன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் விகாரை மற்றும் 100 அடியிலான தூபி மற்றும் கந்தரோடைப் பகுதியில் விகாரை ஒன்றினை அமைப்பதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகள் என்பன தொடர்பில் தமிழர் தரப்பு தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வருகின்றது.

தமிழர் தரப்பின் பல்வேறுபட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது சிங்கள இனவாத அரசியல்வாதிகள் சிலர், குறிப்பாக சரத் வீரசேகர மட்டுமன்றி ஒருசில தமிழ் (சமூக ஊடக) செயற்பாட்டாளர்களும் புதுமையான வாதம் ஒன்றினை முன்வைக்கின்றனர். இலங்கையின் தென்பகுதியில் இந்து ஆலயங்கள் பரவலாகக் காணப்படுவதாகவும் அதே போன்று வடக்கில் விகாரைகள் அமைவதில் தவறென்ன என்பதும் அவர்களின் வாதமாகும்.

இவர்கள் கூறுவது வாதம் என்பதை விடவும் விதண்டாவாதம் என்பதே சரியான பதமாகும்.

ஏனெனில், ஒரு சமூகமானது உள் நாட்டிலோ, வெளிநாட்டிலோ ஒரு பகுதி யில் கணிசமான அளவினராக குடியேறி வாழத்தொடங்கும் போது அவர்களின் மதம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் வழிபாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அம்மக்கள் கூட்டத்தினால் தாம் சார்ந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் வழிபாட்டுத்தலங்களை அமைத்தலும் வழிபடுதலும் சாதாரண விடயமும் அடிப்படை மனித உரிமையும் ஆகும்.

இந்த அடிப்படையில் அமையப்பெற்றவையே தென்னிலங்கை இந்துத் தலங்கள் ஆகும்.

ஆனால், வடக்கில் அமைக்கப்படும் விகா ரைகள் அவ்வாறானவை அல்ல,



முதலில் வழிபாட்டுத்தலத்தை அமைத்துவிட்டு பின்னர் அம்மதம் சார்ந்த மக்களைக் குடியேற்றும் விசமத்தனமான செயற்பாடாகும்.

ஆகவே தென்னிலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு இன்று வரை பரவலாக வாழும் இந்து மதத்தைப் பின்பற்றும் மக்கள் கூட்டம் காலத்திற்குக் காலம் தமது வழிபாட்டுத் தேவைக்காக அமைத்த இந்து ஆலயங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் பௌத்த மதத்தைப் பின்பற்றும் மக்கள் எவரும் அற்ற, தனித் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அமைத்துள்ள, அமைக்க முற்படுகின்ற விகாரைகள் விடயத்தில் ஒப்பிடுவதானது வேடிக்கையான விடயமாக இருக்கின்றது என தெரிவித்துள்ளார்.

# உயிரிழந்த களுத்துறை பாடசாலை மாணவி

## தொடர்பில் பகீர் தகவல்!



ஹோட்டலில் மர்மமான முறையில் உயிரிழந்த களுத்துறை பாடசாலை மாணவியின் சடலம் சட்ட வைத்தியரிடம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து திறந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சிறுமியின் உடல் உறுப்புகள் அரசாங்க பரிசோதகர்க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த சிறுமி மற்றுமொரு பெண் மற்றும் இரண்டு ஆண்களுடன் களுத்துறை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு வந்து இரண்டு அறைகளை வாடகைக்கு எடுத்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மே 6 திகதி ரயில் பாதையை அண்டிய ஐந்து மாடிகளைக் கொண்ட தற்காலிக தங்குமிடத்தின் மூன்றாவது மாடியில் இருந்து விழுந்த பாடசாலை மாணவியின் நிர்வாண சடலம் கண்டு பிடிக்கப்பட்டிருந்தமை அதிர்ச்சியினை ஏற்படுத்தியிருந்தது.

# 74 இலங்கை பணிப் பெண்கள்

## விடுத்துள்ள உருக்கமான கோரிக்கை!



ஓமான் நாட்டுக்கு பணிப் பெண்களாக வேலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பல்வேறு சித்திரைவதைக்குள்ளாகி இலங்கை தூதரகத்தில் தஞ்சடைந்து 9 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 பணிப்பெண்கள் தங்களை நாட்டிற்கு அனுப்புமாறு உருக்கமாக கோரிக்கை விடுத்து காணொளி வெளியாகியுள்ளன.

நாட்டிலுள்ள முகவர்கள் ஊடாக ஓமான் நாட்டிற்கு பணிப்பெண்களாக சென்ற பணிப் பெண்கள் வீட்டின் உரிமையாளர்களால் அடித்தும், நெருப்பால் சூடு வைத்தும் மற்றும் சம்பளம் வழங்காமை போன்ற பல்வேறு சித்திரவதை காரணமாக அங்கிருந்து வெளியேறி இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு உறவினர்களுடன் கூட தொடர்பு கொள்ள முடியாதளவிற்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு திருமணம் கடந்த உறவின் மூலம் கருவுற்றவர்களை உடனடியாக நாட்டுக்கு அனுப்புகின்றனர். ஆனால் ஆரோக்கியமாக உள்ளவர்கள் எவரையும் நாட்டுக்கு அனுப்பாது 9 மாதம் வரை தடுத்து வைத்துள்ளதுடன் பலர் பல நோய்களினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றதுடன் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் போல எங்களை நடாத்துகின்றனர்.

அதன்படி இங்கு நடக்கும் அட்டூழியங்கள் எதுவும் வெளியே தெரிவிக்க முடியாத நிலையிலுள்ளதுடன் இங்கிருந்து நாட்டுக்கு செல்லுகின்ற பெண் ஒருவரின் கையடக்க தொலைபேசியில் நாங்கள் உரையாடி அவரிடம் இதனை வெளியிடுமாறு தெரிவித்து அனுப்பியுள்ளோம்.

எனவே எங்களை இங்கிருந்து காப்பாற்றுங்கள் கைகூப்பி கேட்கின்றோம் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்னர்.

## சித்திரவதை செய்யப்படும் தமிழ்...

தற்போது நடைமுறையிலுள்ள 1978 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட 48ஆம் இலக்க பயங்கரவாதச் தடைச் சட்டமானது, நாடாளுமன்றத்தில் சட்டமூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஒரே நாளில் சட்டமாகிய வரலாறு தற்போதய பயங்கரவாத தடைச் சட்டத்திற்குரியது.

குறித்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, சிறிலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டும் எதிர்க்க, ஏனையவர்களின் ஆதரவுடன் சட்டமாகியது.

இந்தச் சட்டம் தமிழ் இளைஞர்களை அடக்குவதற்காக உருவாக்கப்பட்ட சட்டமாகப் பார்க்கப்படும் நிலையில், தற்போது சிங்கள இளைஞர்களையும் அடக்குவதற்காக குறித்த சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது.

பயங்கரவாத நடை சட்டத்தின் கீழ்,18 மாதங்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தாமல் தடுத்து வைக்கும் அதிகாரத்தை குறித்த சட்டம் வழங்குவதுடன், பல்வேறு கொடூரமான சித்திரவதைகளை மேற்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும் வழிவகுக்கும்.

பெரும்பாலான வழக்குகளில் நீதிமன்றத்தில் முன்னனிலையாகும் காவல்துறையினர், தமிழ் அரசியல் கைதிகளை சித்திரவதைகளை மேற்கொண்டே, குற்றஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்றனர்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை நிராகரித்து, ஆதாரங்களுடன் நீதிமன்றில் சமர்ப்பிக்க நீண்டகாலம் செல்லும் தமிழ் அரசியல் கைதிகளாக, ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்த போதிலும், சிறைகளில் இருப்பவர்கள் சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்படுவதால், நீதிமன்றத்தின் மூலம் பல வருடங்கள் தாண்டி விடு விக்கப்பட்டாலும்,சில வருடங்களில் அவர்கள் இறந்து போகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

பயங்கரவாத தடைச் சட்டம் என்றால் என்னவென்பது தொடர்பில், சிங்களச் சகோதரர்களும் ஆழமாக அறிந்துள்ள நிலையில்,தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்கப் போகின்றோம் எனக் கூறி, தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதச் சட்டத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு முனைகின்றனர்.

எனவே,அடக்கு முறைகளுக்காக உருவாக்கப்பட்ட பயங்கரவாத தடை சட்டத்தை, முற்று முழுதாக நீக்குவதற்கும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைத் தோற்கடிப்பதற்கு, கட்சி, இன பேதங்களுக்கு அப்பால். அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.என தெரிவித்தார்.

## ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்ட...

மே மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில் நாம் பங்குபெற்றுவோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்திக் குறிப்பில்,

தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக நாம் அரசாங்கத்தோடு பேசி முடிவெடுக்கத் தயார்.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை சர்வதேச ரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைக்கு மாறாக எந்த பேச்சு வார்த்தையிலும் ஈடுபட நாம் தயாராக இல்லை.

மேற்சொன்ன அடிப்படையில்தான் மே மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில் நாம் பங்குபெற்றுவோம் – என்றுள்ளது.

# யாழில் தீவிரமடையும் சமூக சீர்கேடுகள்...!

## தெல்லிப்பழை பிரதேச செயலகம் அதிரடி நடவடிக்கை..!




போதை மற்றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாக்க பிரதேச மட்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் போதை மற்றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடன், சர்வோதயம் அமைப்பின் அனுசரணையுடன் பிரதேச செயலகத்துடன் இணைந்து குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று காலை 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. உதவி பிரதேச செயலாளர் சங்கீதா கோகுலதர்சன் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் தலைவரும், லண்டன் வோள்தம் ஸ்ரோம் கற்பகவினாயகர் ஆலய அற ங்காவலர் கோபாலகிருஷ்ணன், கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது, போதை மற்றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாக்க பிரதேச மட்ட குழு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பிரதேசத்தில் தவறான முடிவெடுத்து உயிரிழந்த 17வயது சிறுவன்...!



திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளதாக உப்புவெளி பொலிசார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு (07) இடம் பெற்றிருக்கலாம் எனவும் இச்சம்பவத்தில் 17 வயதான வசந்தராஜா நிலுஜன் எனும் இளைஞனே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்

குறித்த இடத்திற்கு நேற்று (08) வருகைதந்த திருகோணமலை நீதிமன்ற நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்காக உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்கள் பிரதிநிதிகள் மீது தொடரப்பட்ட

## இரு வழக்குகளும் ஒத்திவைப்பு..!சட்டத்தரணி தவராசா கருத்து..!








75 ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு தினமாக அனுஷ்டித்தமை தொடர்பான வழக்கு ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கும், ஜனாதிபதியின் யாழ் விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பான வழக்கு செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

குறித்த இரு வழக்குகளும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் விசேடமாக சமூகம் ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியின் யாழ் விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பாகவும், யாழில் கொண்டாடப்பட்ட 75 ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு தினமாக அனுஷ்டித்தமை தொடர்பான இரு வழக்குகளும் நேற்றைய தினம்(08) நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கறுப்பு தினமாக அனுஷ்டித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன், யாழ் மாநகர முன்னாள் மேயர் மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியவர்களிற்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, கடந்த தவணையில் பிணை வழங்கப்பட்டு 3 மாதங்களின் பின்னர் வழக்கு அழைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நான் 1 ,2,,4,7 லாவது சந்தேக நபராக ஆஜராகி சில விடயங்களை எனது வாதத்தில் முன்வைத்தேன்.

அதில், கைது செய்யப்பட்டமைக்கு முதலறிக்கையில் கூறப்பட்டுள்ள காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்கள் என்றும் இதனால் எந்தவித மான பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் முன்வைத்திருந்தேன்.

அத்துடன் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாயின் பொலிஸாரிற்கு எதிராக நாமே வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். மாறாக அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக பொலிஸார் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறான ஒரு வழக்கினை தாக்கல் செய்து மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றுக்கு அழைத்தமைக்கு நாமே பொலிஸாரிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் .

பொலிஸார் எந்த விதமான முறைப்பாடுகளோ அல்லது சாட்சியத்தின் சுரக்கங்களோ இன்றி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன் கடந்த 3 மாதங்களாக எந்த விதமான புலன் விசாரணைகளும் இடம்பெறவில்லை. ஒரு வழக்கினை தாக்கல் செய்யும் பொழுது அந்த வழக்கின் விசாரணைகளை தொடரவே வழக்கு தாக்கல் செய்து திகதி வழங்கப்படுகின்றது. அந்த விசாரணைக்கு மறுதவணை கொடுக்கும் பொழுது அந்த குறித்த காலத்திற்குள் செய்த விசாரணைகளுடைய மேலதிகயறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

ஆனால் பொலிஸார் எந்த வித மேலதிக அறிக்கையினையும் தாக்கல் செய்யவில்லை.

அதனால் காலம் நேரத்தினையும் சந்தேகநபர்கள் சமூக சேவைகளையும் கருத்திற் கொண்டு இந்த வழக்கினை கிடப்பில் போடுமாறு விண்ணப்பத்தில் மேல்வைத்தோம். குறித்த விண்ணப்பத்தினை மேல் வைத்த அடிப்படையிலே இந்த வழக்கிற்கான தீர்ப்பினை வழங்குவதற்காக ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு குறித்த வழக்கினை ஒத்தி வைத்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியின் விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களிற்கெதிராக ஆஜராகியிருந்தோம். அத்துடன் அந்த வழக்கில் சந்தேக நபர்களை அதிகரித்து செய்வதால் அதனை விரைவாக முடித்து , சட்டமா திணைக்களத்திற்கு அனுப்பி வழக்கு ஒன்று இருக்கின்றதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்குமாறும் நீதிமன்றில் வேண்டுகொண்டோம்.

அத்துடன் காலதாமதமாக அழைக்குமாறும் வேண்டிக்கொண்டதை அடுத்து, இந்த வழக்கினை செப்ரெம்பர் 04 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# இன-மத பிரச்சினைகளை தீவிரப்படுத்த சதி:

## ராஜித சேனாரத்தின



தற்போது அதிகரித்து வரும் இன, மத முரண்பாடுகளால் நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், ஒரு பக்கத்தில் சிங்களவர்களையும் தமிழர்களையும் தூண்டிவிட்டு இன ரீதியான பிரச்சினையை தலைதூக்கிவிட முயற்சி நடக்கின்றது.

மறுபக்கத்தில் பௌத்தர்களையும் இந்துக்களையும் முட்டி மோதவிட்டு மத ரீதியிலான பிரச்சினையை மென்மேலும் தீவிரப்படுத்த சதி நடக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்துக்கு பெரிதும் பாதிப்பே ஏற்படுத்தி வருகின்றது.

மேற்படி இரு பிரச்சினைகளும் ஒரே மேசையில் பேசித் தீர்த்தால் தான் அந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டலாம். இல்லையேல் இந்தப் பிரச்சினைகள் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என என்றார்.

## தமிழர் தாயகத்தில் மற்று...

விகாரைகள் நிர்மானித்த பின்னர் அதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. கட்டிய விகாரையை இடிக்க சொல்வது சாதாரண, இனவாதமற்ற, சாதாரண சிங்கள மக்களையும் கோவப்படுத்தும் செயல் என்றும் தமிழ் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒருமித்த குரலாக ஏதோ ஒரு வகையில் நாளுமன்றத்தில் எதிர்வினை ஒன்றை காட்ட வேண்டும் என்றும் மக்கள் கோருகின்றனர்.

விகாரைக்கு எதிரான போராட்டத்தில் குறைந்த அளிவிலான மக்கள் பங்கேற்ற போது யாழில் இடம்பெற்ற வெசாக் நிகழ்வுக்கு ஆயிரக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டிருந்த செய்தி சர்வதேச உலகிற்கும் வேறு செய்தியையே கொண்டு சேர்க்கும் என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

## தமிழர்களை தாயகத்திலிரு...

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுது டொனமூர் அரசியல் சட்டம் அமுலில் இருந்தது. சிறுபான்மை இனத்திற்கு எதிரான எந்த சட்டமும் கொண்டுவரக்கூடாது என்று அந்த அரசியலமைப்பில் 29ஆம் சரத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த 29 ஆவது சரத்து இருக்கத்தக்கதாகவே ஒட்டுமொத்த மலையக தமிழர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். மேலும் அவர்களது சிவில் அரசியல் சமூக உரிமைகளும் மறுதலிக்கப்பட்டது.

இதன் பின்னர், தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் வர்த்தகங்களை குறிவைத்து அவற்றை இல்லாமல் செய்து 1956இலும் 1977, 1981, 1983 போன்ற பல சந்தர்ப்பங்களில் தென்பகுதியில் இருந்த வடக்கு-கிழக்கு தமிழர்கள் மாத்திரமல்லாமல் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும் அவர்களது தாயக பிரதேசமான வடக்கு-கிழக்கிற்கு கப்பல் மூலமும் விமானம் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இப்பொழுது வடக்கு-கிழக்கைக் குறிவைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்தகோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னர், ஹம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள். கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்க வேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 புத்தவிகாரைகளைக் கட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது. ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டுவிட்டார்கள்.

இலங்கை அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன மத பேதமின்றி போராட்டக்களத்தில் முன்னின்று போராடினார்கள். அந்த காலத்தில் தமிழ் மக்கள் தனிநாட்டிற்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை.

ஆனால் சுதந்திரமடைந்ததன் பின்னர், சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டுவந்த தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டதிட்டங்களும் மொழி, கல்வி, வேலை வாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் காட்டிய பாரபட்சமும், தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டி விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் தனித்துவத்தையும் இல்லாமல் செய்வதற்கு முற்பட்டவையுமே தமிழ் மக்களை சுயாட்சிக்காகவும் பின்னர் தனிநாட்டிற்காகவும் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளியது.

இலங்கையின் தென்பகுதியில் இனமோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குதான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயகபூமியான வடக்கு-கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் நாம் எங்கே செல்வது?

உலகின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் சிறுபான்மை தேசிய இனங்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் பழங்குடியின மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அழிவிலிருக்கின்ற உயிரினங்களும் தாவர இனங்களும் காப்பாற்றப் படவேண்டும் என்றும் குரலெழுப்பும் ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் இவ்வாறான விடயங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் கண்டிக்காமல் இருப்பதும் இலங்கை அரசின் தமிழர் விரோத செயற்பாட்டிற்கு உலகநாடுகளும் ஐ.நா. சபையும் துணைபோகின்றதா என்ற அச்சத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றாப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதவி விலகுமாறு ஜனாதிபதி...

செயலகத்தில் இருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஊடகமொன்றுக்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கருத்து தெரிவிக்கையில், பதவியில் இருந்து விலகுமாறு எனக்கு எந்த அறிவுறுத்தல்களும் ஜனாதிபதி தரப்பில் இருந்து விடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து நான்கு மாகாண ஆளுநர்களை பதவி விலகுமாறு ஜனாதிபதி அலுவலகம் பணித்துள்ளதாக செய்தி முன்னதாக வெளியாகியிருந்தது.

கொழும்பின் ஊடகம் ஒன்று இந்த செய்தியை முக்கியத்துவப்படுத்தி வெளியிட்டிருந்தது.

அத்துடன் கிழக்கு, வடக்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களின் ஆளநர்களை பதவி விலகுமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## வடக்கில் விகாரைகள் சட்டவி...

சிந்தனைகளை கொண்ட இவர், தற்போது சொன்ன விடயம் ஒன்று மீண்டும் தமிழ் மக்களை சினம் கொள்ள வைத்துள்ளது.

அதாவது "வடக்கில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் சட்டவிரோதம் என்றால் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவையே" எனக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம், தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பிலும், அங்கு மேற்கொள்ளப்பட்ட தொடர் போராட்டங்கள் தொடர்பிலும் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தனது வன்மத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்து அவர், "இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள்.

தமிழர்கள் தங்கள் குல தெய்வங்களை வழிபட இலங்கையில் உள்ள எல்லா இடங்களிலும் சிறிய மற்றும் பெரிய ஆலயங்களை அமைத்திருக்கின்றார்கள்.

அதேபோல இலங்கையின் 25 மாவட்டங்களிலும் பௌத்தர்கள் வாழ்வதற்கு, தமது வழிபாட்டிற்கு விகாரைகளை அமைப்பதற்கு முழு உரிமை உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்தர்கள் வாழ முடியாது என சொல்வதற்கும், அவர்கள் தமது வழிபாடுகளை செய்யக் கூடாது என சொல்வதற்கும் எந்தவொரு சட்டமும் இல்லை.

வடக்கில் பௌத்தர்கள் வாழ்கின்றார்கள், இராணுவத்தினர் இருக்கின்றார்கள், ஆகவே அவர்கள் வழிபட விகாரைகள் அமைப்பது சட்டவிரோதம் இல்லை. வடக்கில் உள்ள விகாரைகள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டமை என்றால் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவை."

இவ்வாறு சரத் வீரசேகர தெரிவித்த கருத்தானது, வடக்கு கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் இன, மத ரீதியான பிரச்சனைகள் வலுப்பதற்கு தூண்டுதலை ஏற்படுத்துகிறது.

## தமிழ் இனவழிப்பின் நினைவு...

இடம்பெறவுள்ளது. அந்தவகையில், யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்திற்கு அருகில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.


தொடர்ந்து, மருதனார்மடம் சந்தியிலும், காரைநகர் இந்துக் கல்லூரி முன்பாகவும், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும், சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

புதன்கிழமை(10) காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாகவும் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளத்திலும் வியாழக்கிழமை(11) மன்னார், வவுனியாவிலும் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை(12) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலையில் சிவன் கோவில், அன்பொளிபுரம், பத்திரகாளி அம்மன் கோவில், மூதூர் ஆகிய பகுதியிலும் இடம் பெறவுள்ளது.

சனிக்கிழமை(13) மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் பங்கேற்புடன் வந்தாறுமூலை வளாகம் முன்பாகவும், செங்கலடி, ஆரையம்பதி, மட்டக்களப்பு பிள்ளையார் கோவில் பகுதியிலும், ஞாயிற்றுக்கிழமை(14) அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய இடங்களிலும் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மே 15 முதல் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.



# காரைதீவில் களைகட்டிய சுவாமி விபுலானந்த அடிகளாரின் 99 வது துறவற தினவிழா!



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 99வது துறவற தின விழா கடந்த வெள்ளிக்கிழமை(6) காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

முன்னதாக நந்திக் கொடியேற்றம், சுவாமி பிறந்த இல்லத்தில் பூசை வழிபாடு, சுவாமியின் திருவுருவச்சிலைக்கு காவி வஸ்திரம் அணிவித்தல் புஸ்பாஞ்சலி,துறவற கீதம், ஈசன் உவக்கும் இன் மலர் மூன்று வேத பாராயணம் என்பன இடம் பெற்றன.

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் பணிமன்ற தலைவர் வெ.ஜெயநாதன் கணக்காய்வாளர் வி.குலேந்திரன் உள்ளிட்ட பணிமன்ற நிருவாகிகள் மற்றும் நடன மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.

அதேவேளை, காரைதீவு விபுலாநந்தர் சதுக்கத்தில் உள்ள சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தலும் புஸ்பாஞ்சலியும் இடம்பெற்றது. மற்றும் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள சுவாமியின் திருவுருவச்சிலைக்கு புஸ்பாஞ்சலி வேதபாராயணம் தீபாராதனைகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# புத்தெழுச்சி காணும் ஆயுர்வேதத்துறை

## இந்திய வர்மக்கலை நிபுணரின் விசேட வைத்தியம்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய வைத்திய துறைகளை கட்டியெழுப்பதற்காக பல்வேறு ஆராய்ச்சிகள் உற்பத்திகள் தொழில்சார் பிரேரணைகள் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதன் தொடர்ச்சியாக கைரளிய வர்மா மற்றும் களரி சிகிச்சைகளை கல்முனை சுகாதாரப் பிராந்திய மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக இந்தியாவின் கேரள வர்மக்கலை விசேட வைத்திய நிபுணர் மற்றும் அவரின் குழுவினரை கொண்டு நடமாடும் சேவை நிகழ்வு அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டது

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக் அமைவாக மிக நீண்ட நாட்களாக திட்டமிடப்பட்டு கல்முனை ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம் ஏ நபீல் அவர்களினால் இணைப்புச் செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவை அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அப்துல் ஹை அவர்களினதும் அவர்களின் குழுவினரும் அர்ப்பணிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

பொதுமக்கள் குறித்த நிகழ்வில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றி இருந்தமையினால் ஒரு கட்டத்தில் அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை நோயாளிகளால் நிரம்பி வழியும் அளவிற்கு சன நெரிசலை காணக் கூடியதாக இருந்தது எனினும் குறித்த வைத்தியர்கள் மற்றும் குழுவினரின் சிறந்த திட்டமிடலினால் நோயாளர்கள் சிறப்பாக பார்வையிடப்பட்டு அவர்களுக்கான ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன

2023.05.07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டாளைசேனை ஆயுர்வேத தள வைத்தியசாலையில் நடைபெற்ற இம்மாபெரும் நடமாடும் சேவையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மேலும் குறித்த நிகழ்வில் கல்முனை பிராந்திய ஆயுர்வேதப் பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ. நபீல் உட்பட ஏனைய ஆயுர்வேத மற்றும் யூனாணி வைத்தியர்களும் இந் நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு நடமாடும் வைத்திய சேவை நிகழ்விற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்

# கிழக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற கருணாகரன் கௌரவிப்பு




உள்ளூராட்சி மன்ற நிதி முகாமைத்துவ டிப்ளமோ பயிற்சி நெறியில் கிழக்கு மாகாண மட்டத்தில் 11A, 1B யைப் பெற்று முதலாம் இடத்தை திருக்கோவில் பிரதேச சபையின் நிதி உதவியாளர் வேலுப்பிள்ளை கருணாகரன் பெற்றுக் கொண்டார்.

அவருக்கான சான்றிதழையும் நினைவுச் சின்னத்தையும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் வழங்கி கௌரவித்தார். திருக்கோவில் பிரதேச சபையின் நிதி உதவியாளர் வேலுப்பிள்ளை கருணாகரன் உள்ளக கணக்காய்வு பாடத்துறையில் மெரிட் சித்தியையும் பெற்றிருந்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்களின் திறனை விருத்தி செய்யும் நோக்கத்துடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் அனுமதியுடனும் UNDP நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனும் இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவனத்தினால் கிழக்கு மாகாண முகாமைத்து அபிவிருத்தி பயிற்சி பிரிவில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிதி முகாமைத்துவ டிப்ளமோ பயிற்சி நெறி நடாத்தப்பட்டு அண்மையில் சான்றிதழ் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

# வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மீது தலைவிரித்தாடும் பௌத்த மேலாதிக்கம்..!

## இலங்கைக்கு ஏற்படப்போகும் பேராபத்து




பயங்கரவாத யுத்தத்தினாலும் பொருளாதார அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட வடகிழக்கு வாழ் மக்கள் மீது பௌத்த மேலாதிக்கமும் தலை விரித்தாடுகின்றது என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட பள்ளி வாசல்கள் சம்மேளன செயலாளருமான எம்.எம்.மஹ்தி சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை மீடியா போர ஊடக மையத்தில் நேற்று (08) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வடகிழக்கு வாழ் தமிழ் முஸ்லீம் மக்களின் காணிகள் பல்வேறு வடிவங்களில் கபிலிகரம் செய்யப்படுகின்ற விடயத்தை நாங்கள் நேரடியாக கண்டு கொண்டிருக்கிறோம்.

தொல்பொருள் பாதுகாப்பு, புனித பிரதேச பிரகடனம், இராணுவ முகாம், குடியேற்றம், பௌத்த கோயில்கள் அமைப்பு என பல்வேறு வடி வங்களில் சிறுபான்மை மக்களின் காணிகள் கையகபப்டுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பல்லின மக்கள் வாழுகின்ற இந்த நாட்டிலே அனைத்து மக்களும் சமத்துவத்தோடு வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய இத் தருணத்தில் சிறுபான்மை மக்கள் மீதும் அவர்களுடைய காணிகள் மீதும் தொடர்ந்தும் இவ்வாறான கையாகப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்ற போது இந் நாடு பொருளாதாரத்தால் மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் எனவும் சர்வதேச நாடுகளிடமிருந்து தனிமைப்படுத்தப்படுகின்ற அபாயத்தை ஏற்படுத்தலாம் என அச்சத்தை வெளியிட்டார்.

எனவே இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இருந்து சிறுபான்மை சமூகத்தையும் அவர்களுடைய உரிமைகளையும் காணிகளையும் கையகப்படுத்துகின்ற முயற்சிகளை தடுத்து நிறுத்த ஜனாதிபதி,பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல், புதிய நிர்வாக தெரிவு மற்றும் ரீ சேட் அறிமுகம்





கல்முனை பிராந்தியத்தின் முன்னணி அமைப்புக்களில் ஒன்றான கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல், புதிய நிர்வாக தெரிவு மற்றும் ரீ சேட் அறிமுகம் என்பன சாய்ந்தமருதில் அமைந்துள்ள ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயத்தில் 2023.05.06 ஆம் திகதி மாலை நடப்பாண்டுக்கான தவிசாளர் பொறியியலாளர் யூ.கே.எம்.முஸாதிக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக ஒன்றியத்தின் அங்கத்தினர்களாக இருந்து மரணித்தவர்களுக்காகவும் சுகயீனமுற்றிருக்கும் தோழர்களின் ஆரோக்கியத்துக்காகவும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. தொடர்ந்து நடப்பாண்டுக்கான தவிசாளர் பொறியியலாளர் யூ.கே.எம். முஸாதிக் அவர்கள் தனது உரையின்போது ஒன்றியத்தின் கடந்து வந்த பாதைகள் அங்கு இடம்பெற்ற முன்னெடுப்புக்கள், எதிர்காலத்தில் கைக்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் போன்ற விடயங்களை விரிவாக எடுத்துக் கூறினார்.

புதிய தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நஸீர் அவர்களால் ஒன்றியத்துக்கு ஒருதொகை ரீ சேட்கள் வழங்கப்பட்டு அவைகள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் யூ.கே.எம். முஸாதிக் அவர்களின் கரங்களால் அங்கத்தினர்களுக்கு அவைகள் வழங்கி வைக்கப்பட்டன. பின்னர் 2023/2024 ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்: அதனடிப்படையில் தவிசாளராக பொறியியலாளர் எம்.எம். நஸீர், நிருவாகப் பணிப்பாளராக பிரதம தபாலதிபர் யூ.எல்.எம். பைஸர், நிதிப் பணிப்பாளராக ஓய்வுநிலை அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம். சலீம், உதவித் தவிசாளராக எம்.எம். ஜுனைடீன், திட்ட அமுலாக்கல் பணிப்பாளராக ஐ.எல். நயீம், ஊடகப் பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.வை. அமீர், சட்ட ஆலோசகராக யூ.கே.எம். முஸாஜித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் பிரதி நிருவாகப் பணிப்பாளராக எம்.எம். உதுமாலெப்பை, பிரதி நிதிப் பணிப்பாளராக ஏ.எல்.எம். அன்வர், பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக ஐ. அலியார், யூ.எல்.எம். ஹனிபா, எம்.ஏ.சீ. எல். நஜீம், ஏ. பரீட், ஏ.எம் றஸ்மி, எம்.ஏ. றபீக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய புதிய தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நஸீர் அவர்கள் தன்னை ஒன்றியத்தின் தவிசாளராக தெரிவு செய்தமைக்காக அங்கத்தினர்களுக்கு நன்றி தெரிவித்தமையுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பல்வேறு திட்டங்கள் தொடர்பிலும் எடுத்துக் கூறினார். இறுதியாக நிருவாகப் பணிப்பாளர் பிரதம தபாலதிபர் யூ.எல்.எம். பைஸர் அவர்களது நன்றி உரையுடன் நிகழ்வு முடிவுக்கு வந்தது.



# டெங்கு ஒழிப்பு சிரமதானம்

நாட்டில் டெங்கு பெருக்கம் அதிகரித்திருப்பதுடன் மிக நீண்டகால விடுமுறைகளில் பாடசாலைகள் இருந்தமையால் மாணவர்களுக்குச் சுகாதாரமான சுற்றுச் சூழலை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளுக்கமைவாக கல்முனை கல்வி வலய கல்முனை நகர் இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம் பாடசாலை அதிபர் எம்.ஜி. எம். நிசாத் தலைமையில் இடம்பெற்றது.

இச்சிரமதான நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம். அறுஸ்தீன் அவர்களின் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் கலந்து கொண்டனர். அத்தோடு பாடசாலை அபிவிருத்திகுழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து இப்பணியினைச் சிறப்பாக செய்து முடித்தனர்.

# கல்வியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, நீதிக்கான மய்யத்தினால் தீர்வு!



கல்வியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் பாடத்திற்கு மாணவர்களை உள்ளீர்ப்பதில் கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு இளைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேற்கொண்ட சட்ட நடவடிக்கையினால் கல்வி அமைச்சு தீர்வினை வழங்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் நீதிக்கான மய்யம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த 08.02.2023 ஆம் திகதி அதன் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில், செயலாளர் கலாநிதி நியாஸ் ஏ.மஜீத் ஆகியோர் கையொப்பமிட்டு முறைப்பா டொன்றினை பதிவு செய்திருந்தனர்.

அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதானது, கடந்த பல வருடங்களாக கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் சமய பாடநெறிகளுக்கு கல்வியற் கல்லூரிகளுக்கு சமமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தமிழ் மொழி மூலமாக இந்து, கிறிஸ்தவ, மற்றும் இஸ்லாம் பாட நெறிகளுக்கு கல்வியற் கல்லூரிகளில் 30 மாணவர்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர். 2016, 2017 ஆண்டுகளிலும் மூன்று பாடநெறிகளுக்கு சமமானவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டு கல்வியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும் போது இந்து சமய பாடத்திற்கு 40 (2019, 2020) மாணவர்களையும், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு தலா 20 மாணவர்களை மாத்திரம் உள்வாங்க இருப்பதாக வர்த்தமானியில் கல்வி அமைச்சு அறிவித்தல் வழங்கியுள்ளது.

இந்த வர்த்தமானியை ரத்து செய்து இஸ்லாம், கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு மாணவர்களை கூடுதலாக உள்வாங்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவில் நீதிக்கான மய்யம் முறைப்பாடொன்றினை பதிவு செய்திருந்தது.

இம்முறைப்பாட்டினை ஏற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக கல்வி அமைச்சு குறித்த இரு பாடநெறிகளுக்கும் கூடுதல் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக நீதிக்கான மய்யத்திற்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள பதிலில் சமூக நிறுவனங்கள் கல்வியலாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப கல்வியற் கல்லூரிகளில் இஸ்லாம், கிறிஸ்தவ பாடங்களுக்கான மாணவர்களின் எண்ணிக்கை இஸ்லாம் பாடத்திற்கு 60 ஆகவும் கிறிஸ்தவ பாடத்திற்கு 34 ஆகவும் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அநீதி இளைக்கப்பட்ட கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு தீர்வினை பெற்றுக்கொடுத்த நீதிக்கான மய்யத்திற்கு கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

நீதிக்கான மய்யம், முஸ்லிம் மாணவர்களிடமிருந்து ஞானசார தேரரின் சிபாரிசின் பேரில் பறிக்கப்பட்ட இஸ்லாம் பாட புத்தகத்தினை மீள பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் ஸகாத் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடல்



சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் ஸகாத் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடல் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பைதுஸ் ஸகாத் நிதியத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம் பெற்றது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பைதுஸ் ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவி ஐ எல்.எம். றஹ்பியின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் அல்-ஹாஜ் ஏ.எம்.ஹிபத்துல் கரீம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் எம்.எம்.சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளரும், இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம், சொப்டா கெயா நிறுவனத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம்.நஸீர், நியோ மார்க்கட்டிங் தவிசாளர் என்.எம்.நிஸ்மீர், சமுர்த்தி திட்ட முகாமையாளர் நியாத் ஏ.மஜீத், கிராம சேவை உத்தியோகத்தர் எல். நாஸர் உள்ளிட்ட பைதுஸ் ஸகாத் நிதியத்தின் உறுப்பினர்கள், உலமாக்கள், மரைக்காயர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இம்முறை ஸகாத் விநியோகத்தினை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதில் இம்முறை ஸகாத் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை முதல் கட்ட நடவடிக்கையாக முஹல்லா பள்ளிவாசல் நிர்வாகத்திடம் ஒப்படைத்து தெரிவுகளை மேற்கொள்வது எனவும் அடுத்த கட்டங்களாக கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகவும் அதனை அடுத்து சாய்ந்தமருது, மாளிகைக்காடு பைதுஸ் ஸகாத் நிதியத்தின் உறுப்பினர்கள் ஊடாகவும் தெரிவுகளை மேற்கொள்வது என இணக்கம் காணப்பட்டது.

இம்முறை ஸகாத் விநியோகத்தின் போது சுயதொழில், பூர்த்தியாகாத வீடுகளை உரியவர்களின் பங்களிப்புடன் உதவுதல், கல்விக்கு உதவுதல் போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. மேலும் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தில் வீடற்றோருக்கு சாய்ந்தமருதில் "ஸகாத் கிராமம்" எனும் திட்டத்தினூடாக எதிர்காலத்தில் வீடுகள் நிர்மாணித்துக் கொடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. ஸகாத் விநியோகத்தின் போது பயனாளிகளை தெரிவு செய்வது தொடர்பில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினை ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் விகாரைகள் அமைப்பதற்கு நான் என்றும் எதிர்ப்பு! – அங்கஜன்

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் விகாரைகள் அமைப்பதற்கு நான் என்றும் எதிர்ப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

குரும்பசிட்டி கிழக்கு கலைமகள் முன்பள்ளி, இளைஞர் அமைப்பு, சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடாத்திய கிராமிய விளையாட்டு விழா நேற்று முன்தினம் (07) நடைபெற்ற போது குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட இந்த குரும்பசிட்டி கிழக்கு கிராமத்தின் இளைஞர்கள் கிராமிய விளையாட்டுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பாராட்டத்தக்கது.

பல்வேறுபட்ட அடிப்படைத் தேவைகளோடு இருக்கும் இந்த மக்கள் தமது விவசாய நிலங்களை இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என தொடர்ந்து கோருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலயம் என்பது பாதுகாப்பு தேவைகளை தாண்டி விகாரைகளை அமைத்து மதநடவடிக்கைகள் செய்யப்படுவதற்கு நான் என்றும் எதிர்ப்பு தெரிவிக்கின்றேன்.

எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இவ்விடயங்களை நிச்சயமாக நான் வலியுறுத்துவேன்.

அண்மையில் தையிட்டில் இடம்பெற்ற போராட்டத்தை தொடர்ந்து, சிலர் விகாரைகள் அமைத்தால் என்ன தவறு? நாம் லண்டனில் கோயில் கட்டவில்லையா? கனடாவில் கோயில் கட்டவில்லையா? என கேட்கிறார்கள்.

நான் விகாரை கட்டப்படுவதற்கு எதிர்ப்பில்லை. அது மக்களின் காணியில் அனுமதியின்றி கட்டப்படுவதை எதிர்க்கிறேன்.



உயர்பாதுகாப்பு வலய போர்வைகள் விகாரைகள் அமைப்பதை எதிர்க்கிறேன். உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் நிலங்களை கொண்டுள்ள மக்களின் வேதனையை நான் அறிவேன். எனது காணிகளும் அண்மையில் தான் விடுவிக்கப்பட்டன.

வளம்மிக்க எமது நிலங்கள் எமது மக்களுக்கு திரும்பக் கிடைக்கவேண்டியது அவசியமானது. என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

## இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வடகிழக்கினை ஜனாதிபதி ஒன்றாக கையாளவேண்டும்...! இரா.துரைரெட்னம் வேண்டுகோள்...!



ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வடக்கு கிழக்கினை ஒன்றாக கையாளவேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் பிரதி தலைவருமான இரா. துரைரெட்னம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த கோரிக்கையினை முன்வைத்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், தமிழ் மக்களின் தீர்வு திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் வடக்கு வேறு கிழக்கு வேறு என கையாள முற்படுவது கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மையின மக்களின் வடகிழக்கு தமிழ் மக்களின் தாயகமாக வரலாற்று அடிச்சுவடுகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களை ஜனாதிபதி அவர்கள் பிரித்து கையாள முயற்சிப்பதும் அதற்காக ஒரு சில தமிழ் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குவதும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஜனாதிபதி அவர்கள் வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பாக வடகிழக்கினை ஒன்றாக கையாளவேண்டும் என கோரிக்கையினை முன்வைக்கின்றேன்.

கடந்த வாரம் ஜனாதிபதி அவர்கள் மிகவும் விரைவாக இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டத்தினை முன்வைப்பதற்கும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும் என்று அறிவித்துள்ள விடயத்தினை நாங்கள் கௌரவத்துடன் ஏற்றுக்கொள்கின்றோம், அதனை வரவேற்கின்றோம்.

வடகிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி முயற்சிப்பது என்பது காலத்தை இழுத்தடிக்காமல் மிகவும் விரைவாக பிரச்சியை தீர்ப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பார் என்று நம்புகின்றோம்.

இந்த பேச்சுவார்த்தையின் முதல்கட்டமாக வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான செயல்வடிவத்தினை முன்னெடுக்கும்போது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் அரசியல் சாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட 13வது திருத்த சட்டத்தினை முழுமையாக அமுல் படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் அந்த தேர்தல் நடாத்தப்படவில்லை. மாகாணசபை தேர்தலை விரைவாக நடாத்துவதற்கு ஜனாதிபதி அவர்கள் நடவடிக்கையெடுக்கவேண்டும்.

மாகாணசபை தேர்தலை நடாத்தாமல் மாகாணசபை முறைமையின் கீழ் உள்ள பல நிர்வாக செயற்பாடுகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவருவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்தவரையில் மாகாணசபையின் கீழிருந்த சில வைத்தியசாலைகள், மாகாணசபைகள் மத்திய அரசின் கீழ் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இதேபோன்று உள்ளூராட்சிமன்றங்களில் உள்ள சில பிரிவுகளை மத்திய அரசின் கீழ் கொண்டுசெல்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் இருக்கின்றது.

எனவே வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் தலைமைகள் மாகாணசபை தேர்தலை நடாத்தாமல் மத்திய அரசு இழுத்தடிக்கும் நிலையில் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள மாகாணசபையின் பல விடயங்களை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லும் விடயத்திற்கு வழியேற்படுத்தி விடக்கூடாது எனவும் தெரிவித்தார்.

## விசாரணை என்ற பெயரில் முட்டுக்...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிருக்கு எதிர்வரும் 15ம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விடயமானது ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் போராளிகளை அரசு இன்னும் பயங்கரவாதிகள் என்ற கண்ணோட்டத்திலே பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடு ஜனநாயக வழியில் செயற்படுகினற அமைப்புகளை மீளவும் அச்சுறுத்தும் வகையிலே அமைந்துள்ளது. இவ்வாறான இலங்கை அரசின் முடிவுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஒரு இனத்தின் ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்ற நிலையில் யுத்தத்தின் பின்னர் பொது வெளிச் செயற்பாடுகளில் ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற போராளிகள் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த போராளிகள் தொடந்து இவ்வாறான விசாரணைகளுக்கு அழைக்கப்படுகின்ற விடயம் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

அதிலும் முன்னாள் போராளிகள் ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியில் ஒரு அரசியற் கட்சியாக அமைக்கப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்காக அழைப்பதென்பது புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் போராளிகள் அனைவரையும் அச்சத்திற்குள்ளாக்கும் விடயமாகும். அதிலும் தற்போதைய முள்ளிவாய்க்கால் காலப் பகுதியில் இவ்வாறான அநீதியான விசாரணைச் செயற்பாடு ஜனநாயகத்தைச் நேசிக்கும் பலரையும் கேள்விக்குட் படுத்தும் நடவடிக்கையாகும்.

யுத்தம் முடிவுற்ற காலப்பகுதியில் இருந்து ஜனநாயக வழியிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தரப்புகளை இலங்கையின் பயங்கரவாதப் பிரிவு விசாரணைக்கு அழைப்பது ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒன்று. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, இலங்கை இராணுவம் ஏனைய புலனாய்வுப் பிரிவினர் தொடர்ச்சியாக போராளிகளின் வீடுகளுக்குச் செல்வதும், விசாரணை என்ற பெயரில் அழைப்பதும் ஒரு சுமூகமான வாழ்க்கையை வாழந்து கொண்டிருக்கும் போராளிகள் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்துகின்றது.

இந்த வகையில் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, நீதிமன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையிலும், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையிலும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகளை தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் அச்சுறுத்தும் இவ்வாறான செயற்பாட்டை ஜனநாயக ரீதியாக நாங்கள் வன்மையகக் கண்டிக்கின்றோம்.

இது போராளிகளின் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதமாக அமைந்துள்ளது. இவ்வாறான விசாரணைகள் மூலம் போராளிகளை அச்சம் கொள்ளச் செய்யலாம், ஜனநாயக ரீதியில் அவர்களின் செயற்பாடுகளை முடக்கி விடலாம் என்று அரசு நினைக்குமாயின் அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே தரும். ஏனெனில் எமது மக்களுக்கானதும், போராளிகளுக்குமான ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்தே வருவோம். எனவே விசாரணைகள் என்ற பெயரில் இது போன்ற அச்சுறுத்தல்களை இலங்கை அரசு உடன் நிறுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.



# தங்கப் பதக்கங்களை வென்று யாழிற்கு பெருமை சேர்த்த மாணவர்கள்!



தியகமவில் நடைபெற்றுவரும் 63ஆவது கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டியில் 23 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் புதிய போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றெடுத்த ஹாட்லி கல்லூரி வீரர் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ், குண்டெறிதல் போட்டியிலும் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். மாவட்டத்திற்கு ஒரு தங்கம் உட்பட 4 பதக்கங்கள் நேற்று திங்கட்கிழமை (08) கிடைத்தன.

சாவகச்சேரி இந்து கல்லூரிக்கு ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கமும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒரு தங்கப் பதக்கமும், விக்டோரியா கல்லூரிக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் கிடைத்தன.

இந்நிலையில் 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்து கல்லூரியின் பி. அபிஷாலினி 2.90 மீற்றர் உயரம் தாவி தங்கப் பதக்கத்தையும் கே. மாதங்கி 2.30 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர்.


23 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். பல்கலைக்கழக வீராங்கனை என். டக்சிதா 3.40 மீற்றர் உயரம் தாவி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் எஸ். கிறிஸ்டிகா 2.60 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இது இவ்வாறிருக்க, 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி வீரர் கே. தேவமதுமிதன் (12.68 மீற்றர்) வெண்கலப் பதக்கம் வென்றார்.

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி வீராங்கனை விநாயகமூர்த்தி சங்கீதா (30.48 மீற்றர்) வெண்கலப் பதக்கம் வென்றார்.

இந்நிலையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பல்லரும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் கூறி வருகின்றனர்.




**முள்ளிவாய்கால் நினைவு மாதம் என்றபடியால் முள்ளிவாய்க்கால் சம்பந்தப்பட்ட உங்களது ஆக்கங்களை எமக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வையுங்கள்...!**

E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

# இரவு தனியார் கிளினிக்கு வந்தவர்களால் மருத்துவருக்கு காத்திருந்த அதிர்ச்சி!



மன்னார் -நானாட்டான் பிரதேசத்தில் ஓய்வு பெற்ற வைத்தியர் ஒருவரின் தனியார் கிளினிக்கிற்கு நேற்று முன்தினம் (7) இரவு 9 மணியளவில் புகுந்த கொள்ளையர்கள் கத்தியை காட்டி மிரட்டி சுமார் 5 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த சம்பவமானது நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த வைத்தியரின் தனியார் கிளினிக்கில் இடம் பெற்றுள்ளது.

கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசிக் கொண்டு குறித்த வைத்தியரிடம் கத்தியை காட்டி மிரட்டி உள்ளனர்.

இதன் போது சுமார் 5 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகை போன்றவற்றை அபகரித்துள்ளதுடன் வீட்டில் இருந்த பெண்களின் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்கள்.

சம்பவத்தின்போது வைத்தியரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில் வைத்தியருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. திருட்டுச் சம்பவம் தொடர்பாக நேற்று பாதிக்கப்பட்ட வைத்தியர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை நானாட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல திருட்டு சம்பவங்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

# மன்னாரில், சிறுவர்களை கடத்த முயற்சி! பெற்றோர்களுக்கு எச்சரிக்கை!



மன்னாரில், அண்மைக் காலங்களாக, சந்தேகத்திற்கு இடமான வாகனங்கள் சுற்றித்திரிவதாகவும், சிறுவர்களை இலக்கு வைத்து, அவர்களை கடத்தும் நோக்கில், சிலர் மன்னார் மாவட்டத்திற்குள் ஊடுருவியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், நேற்று, குறித்த சம்பவம் தொடர்பாக, துரித விசாரணை முன்னெடுக்கப்பட்டதுடன், பொலிஸாரின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளதாக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள பாடசாலை மாணவர் ஒருவரை, வாகனம் ஒன்றில் வந்தவர்கள் இனிப்பு பண்டங்களை வழங்கி, குறித்த மாணவரை பலவந்தமாக ஏற்றிச் செல்ல முயற்சி செய்யப்பட்டதாக, குறித்த மாணவர், தனது பெற்றோரிடம் தெரிவித்த நிலையில், குறித்த சம்பவம் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, மாணவன் கல்வி கற்கும் பாடசாலைக்குச் சென்று, நேற்று காலை, மாணவனிடம் விசாரணைகளை மேற்கொண்டேன்.

இதன் போது, மேலும் ஒரு மாணவனை, நேற்று காலை பாடசாலைக்குச் செல்லும் போது, இனிப்பு பண்டங்களை வழங்கி, வாகனத்தில் ஏற்ற முற்பட்டதாக தெரிவித்துள்ளார். இச்சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதோடு, பாடசாலை பகுதிகளில், விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

இதனால், சந்தேகத்திற்கிடமான வாகனங்களின் நடமாட்டம் தெரிந்தால், உடனடியாக பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவாருங்கள்.என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வலியுறுத்தியுள்ளார்.